583 துப்புரவுப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இதுதவிர, பல்வேறு துறைகளிலும் துப்புரவுப் பணியாளர்கள் தூய்மைப் பணியைச் செய்து வருகிறார்கள். பொது இடங்களில் தூய்மையைப் பேணிக்காப்பது, புயல், மழை போன்ற இயற்கைச் சீற்றங்களின்போது தூய்மைப் பணிகளை மேற்கொள்வது, தெருக்களில் சேரும் குப்பைகளை அகற்றி சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரம் பேணுவது மற்றும் பேருந்து நிலையம், சந்தைகள், ஆலயங்கள் மற்றும் வணிக வளாகப் பகுதிகளில் உள்ள குப்பைகள் மற்றும் கழிவுகளை அகற்றி இவர்கள் மேற்கொண்டு வரும் துப்புரவுப் பணி, மக்களின் நலனையும், பொதுச் சுகாதாரத்தையும் பேணுவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. இவர்களது நலனைப் பேணுவதில் அக்கறை கொண்டு, இப்பணியாளர்களுக்குக் குடியிருப்பு கட்டுதல், அவர்தம் குடும்பத்தினருக்கென குறிப்பிட்ட கால இடைவெளியில் மருத்துவப் பரிசோதனை முகாம்கள் நடத்துதல், அவர்களது குழந்தைகளின் எதிர்கால நன்மையைக் கருதி சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துதல் மற்றும் திறன் பயிற்சி அளித்தல் போன்ற நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மாவின் அரசு மேற்கொண்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து, இப்பணியாளர்களின் செயல்பாடுகளைக் கௌரவிக்கும் வகையிலும், அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றிடவும், அனைத்துத் துப்புரவுப் பணியாளர்களும், இனி "தூய்மைப் பணியாளர்கள்" என்று அழைக்கப்படுவார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

6. எரிசக்தி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி மற்றும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைகள் தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–20

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தை மின் மிகை மாநிலமாக உருவாக்கித் தந்ததை தொடர்ந்து தக்க வைக்க வேண்டுமென்ற அடிப்படையில் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர், காவேரி காப்பாளர், குடிமராமத்து நாயகன், விவசாயிகளுக்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்ற தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன்

அவர்களை வணங்குகிறேன். இன்று தமிழகத்தில் உற்பத்தியாகின்ற மின்சாரத்தை, சீராக அனைத்துப் பகுதிகளுக்கும் வழங்க வேண்டும் என்பதற்காக 26 துணை மின் நிலையங்களையும், அதேபோல் ஸ்மார்ட் மீட்டர்களை சென்னை மாநகரத்தில் பொருத்துகின்ற திட்டத்தினையும், கடலோர மாவட்டங்களில் இயற்கைச் சீற்றங்களின் காரணமாக பல்வேறு பாதிப்புகள் வருகின்றபோது மின் தடை ஏற்படுகின்ற நிலையை மாற்றி, மின் தடை இல்லாமல் சென்னையைப் போல் இருக்க வேண்டும் என்பதற்காக கடலோர மாவட்டங்களில் ரூ.300 கோடி மதிப்பீட்டில் புதைவடத் தடங்களாக மாற்றுகின்ற திட்டத்தினையும், உற்பத்தியாகின்ற மின்சாரத்தை சீராகக் கொண்டு செல்ல வேண்டும், மின் மாற்றிகளை தரமானதாகப் பொருத்த வேண்டும் என்பதற்காக மின் பகிர்மானக் கழகத்திற்கு 187 கோடி ரூபாயும் அறிவித்திருக்கின்ற மரியாதைக்குரிய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மின்மிகை மாநிலம் மட்டுமல்ல, எதிர்காலத்திலும் பிரச்சினைகள் இருக்கக் கூடாது, குக்கிராமங்களிலும் சீரான மின்சாரம் வழங்க வேண்டும் என்பதற்காக விதி 110–ன்கீழ் அறிவித்திருக்கின்ற அத்தனைத் திட்டங்களுக்கும் தமிழ்நாடு மக்களின் சார்பாகவும், இந்தச் சட்டமன்றத்தில் உள்ள மாண்புமிகு அமைச்சர்கள் சார்பாகவும், சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும், மரியாதைக்குரிய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்களுக்கு விதி 110–ன்கீழ் அற்புதத் திட்டங்களை வாரி வழங்கிய தர்ம தேவதை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை படியெடுத்து வைத்ததைப்போல் அடியெடுத்து வைத்து ஆட்சியை அழகுற நடத்திவரும் ஆற்றல்மிகு தலைவர், உழவர் மகன், காவேரி காப்பாளர், தமிழகத்தை Number One மாநிலமாக ஆக்கிய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் விதி 110–ன்கீழ் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும்

2020 மார்ச் 19] [திரு. எஸ்.பி. வேலுமணி]

ஊராட்சித் துறையின் சார்பில் சாலை மேம்பாடு, பாதாள சாக்கடைத் திட்டங்கள், குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள், ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள், 10,000 தடுப்பணைகள், 12,525 முதியோர் சுய உதவிக் குழுக்கள் என மொத்தம் 6,992 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 19 முத்தான திட்டங்களை அறிவித்துள்ளார்கள். சுய உதவிக் குழுக்களுக்கு 16,000 கோடி ரூபாய் நேரடியாக வங்கிக் கடன் வழங்குதல், துப்புரவுப் பணியாளர்களைக் கௌரவப்படுத்தும் வகையில் இதுவரை யாரும் செய்யாத ஓர் அற்புதமாக, அவர்களை மிகப் பெரிய அளவில் கௌரவிக்கும் விதமாக 'தூய்மைப் பணியாளர்கள்' எனப் பெயர் மாற்றம் செய்து அறிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இச்சட்டமன்றக் கூட்டத் தொடரில் மட்டும் நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை தொடர்பாக மொத்தம் 86 அற்புதமான அறிவிப்புகளை வாரி வழங்கியமைக்காக மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது சார்பாகவும், நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறையின் சார்பாகவும், கோவை மாவட்டத்தின் விரிவாக்கப் பகுதிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டத்தினை அறிவித்துள்ளமைக்காக, கோவை மாவட்ட மக்களின் சார்பாகவும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

7. மானியக் கோரிக்கைகள், 2020–2021, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 12—கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 13—உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

(அ) கோரிக்கை எண் 12—கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020–2021 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 12–கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை). மாண்புமிகு கூட்டுறவுத் துறை